Registered as a Newspaper

மக்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM — மக்கள் தினசரி — Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | மார்கழி 21 | (05-01-1994) | புதன்கிழமை | ஓசை 321

## தமிழீழ பொது கல்வி தேர்வு-1993 முடிவுகள் இன்று வெளியாகின்றன

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வுக்கான பெறுபேறுகள் இன்று வெளியாகின்றன. வடமாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 16,500 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றிய இப்பொதுக்கல்வித் தேர்வில் தேசிய, கோட்ட மட்டங்களில் கூடுதல் புள்ளிகளைப் பெறுபவர்களுக்கு தேசியத் தலைவரினது பரிசுகளும் பாராட்டிதழ்களும், கல்வி மேம்பாட்டு பேரவையினால் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன. தேசிய மட்டத்தில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் முதல் 10 பேரும், கல்விக்கோட்டங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் முதலிரு இடங்களைப் பெறுபவர்களும் பரிசுகளைப் பெறுவர். தேர்வுப் பெறுபேறுகள் யாழ். (4ஆம் பக்கம் பார்க்க)

## புதிதாக வகுத்துள்ள திட்டத்தினால் படையினருக்கு மிகுந்த பலன் ஏற்படும்

### பாதுகாப்புச் செயலாளர் ஹமில்டன் நம்பிக்கை

(கொழும்பு)

தாம் வரைந்துள்ள சில திட்டங்களினால் ஆயுதப் படைகளுக்கு மிகுந்த பலன்கள் ஏற்படும் என எதிர்பார்ப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார். ஆயுதப் படைகளுக்கு எதிராக எழுந்துள்ள அச்சுறுத்தலுக்கு இது முகம்கொடுப்பதாக அமையும் என ஐலண்ட் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான சிறிலங்கா படைகளின் ஒரே மாதிரியான யுத்த தந்திரமும் மூலோபாயமும் 1994 இல் வெளிச்சத்திற்கு வரலாம், 1993இல் நடந்த சம்பவங்களிலிருந்து கற்பதற்கு நிறைய உள்ளது என்பதை காட்டுகின்றது எனவும் அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினருக்கு விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் தயாராக பயிற்சிவழங்க வேண்டும். புலிகளின் போர்முறைகள் குறித்தும் மரபுவழியற்ற ( 4 ஆம் பக்கம் பார்க்க )

## தலதாவிற்கு புதிய தளபதி

(கொழும்பு)

புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா நேற்று கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்து வழிபாடு செய்ததுடன் மல்வத்தை பீட, அஸ்கிரிய பீட பீடாதிபதிகளையும் சந்தித்து ஆசி பெற்றார்.

மேலும் ஆயுதப்படையினருக்கும் அரசாங்கத்துக்கும் ஆசிகோரி கண்டியில் நடைபெற்ற பிரார்த்தனை நிகழ்வுகளிலும் இவர் கலந்து கொண்டார் என தெரிவிக்கப்படுகிறது.

## ஆசியாவில் சிறந்த ராணுவமாயினும் வெற்றி பெறமுடியாதிருப்பது ஏன்?

### பிரியாவிடையில் சிசில் ஆதங்கம்

(கொழும்பு)

எமது ஆயுதப் படையினர் உலகில் சிறந்த இராணுவப் பயிற்சி நிறுவனங்களில்பயிற்சி பெற்றவர்கள். ஆசிய பிரதேசத்தில் உள்ள எந்த ஓர் இராணுவத்தினரையும் விட தமது இராணுவம் சிறந்த தொழில்சார்திறமை மிக்கது.

இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல சிசில் வைத்தியரெட்னா எமது பிரியாவிடை வைபவத்தில் கலந்துகொண்டு பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசும் போது, எதிரியோ, குறைந்த ஆட்பலம், குறைந்த ஆயுத பலம் கொண்டவன், ஆயுதப் படையில் எமது நோக்கங்களிலும், போர்த்திறன்களிலும் எமது படையினர் தெளிவாக இருப்பார்களாயின் ஏன் வெற்றி பெறமுடியாது? என்று கேள்வி எழுப்பினார்.

அத்துடன் படையினரின் மன உறுதி வளர்க்கப்பட வேண்டும் எனவும், அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

தொடர்ந்து பேசும்போது, ஈழப்போரினால் இதுவரை ஒன்பது ஆயிரத்திற்கும் அதிக (4ஆம் பக்கம் பார்க்க)

## வாதுவவில் தபால் பொதி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கு தேவையான அத்தியாவசிய பொருள்களின் ஒரு தொகுதியுடனும் 500 தபால் பொதிகளுடனும் 'வாதுவ' கப்பல் இம் மாதம் 10 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தில் இருந்து புறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதில் உரம் மற்றும் யாழ் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான பொருள்கள் எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (நி,ச)

# கடற்படை வெறியாட்டம்; 9 மீனவர் கொல்லப்பட்டனர்

## பருத்தித்துறை கடலில் துயரச் சம்பவம்

(வடமராட்சி)

பருத்தித்துறை சக்கோட்டைக் கடற்பரப்பில் மீனவர் மீது நேற்று சிறிலங்கா கடற்படையினர்நடாத்திய பீரங்கி, துப்பாக்கிச்சூட்டு தாக்குதலினால்ஒன்பது அப்பாவி மீனவர்கள் பலியாகினர். இவர்களில் ஒருவர் படகில் வைத்துச்சுட்டுக் கொல்லப்பட்டார். ஏனையோர் கடலில்குதித்து நீந்தியபோதும் குறிபார்த்துச் சுடப்பட்டனர். வெற்றிலைக்கேணியிலிருந்து காங்கேசன் துறைநோக்கிச்சென்ற கடற்படையினரே இவ்வாறு மீனவர்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. ஏனையோரின் சடலங்கள் தேடப்பட்டுவருகின்றன. மேலும் மீனவரின் மூன்று படகுகள் சேதமடைந்தன. இயந்திரமொன்று கடலில் தூக்கி

## ஒருதொகுதி மாவுடன் மாகோ விரைவில் வரும்

திருக்கோணமலையில் இருந்து ஒருதொகுதி மாவை ஏற்றிக்கொண்டு 'மாகோ' கப்பல் எதிர்வரும் 7ஆம் திகதி பருத்தித்துறையை வந்தடையும் என தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மா தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு யாழ். அரச அதிபர் எடுத்த துரித முயற்சியினால் ... படவுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை யாழ். குடாநாட்டிற்கான ஒரு தொகுதி மண்ணெண்ணெயை ஏற்றிக்கொண்டு "கோமாரி" கப்பல் இம் மாதம் 14ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி புறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வழிகாட்டல் வகுப்புகள்

யாழ். பல்கலைக் கழக வெளிவாரி மாணவர்களிற்கான வழிகாட்டல் வகுப்புகள் இம் மாதம் மூன்றாம் திகதியிலிருந்து கலைப் பீடத்தில் இடம்பெற்று வருகிறது. வரும் 13-ம் திகதி வரை இடம்பெறவுள்ள வழிகாட்டல் வகுப்புகள் கலை/வர்த்தக, முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டு மாணவர்களிற்கு உதவும் பொருட்டு அவ்வவ்துறை சார் விரிவுரையாளர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

## மாகாணசபை தேர்தல்நியமனம்

(கொழும்பு)

கலைக்கப்பட்ட தென்மாகாணசபைக்கான புதிய தேர்தலுக்காக வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை ஏற்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுதல் ஐந்து வாரங்களுக்கு முந்தாமலும் எட்டு வாரங்களுக்கு பிந்தாமலும் தேர்தல் நடைபெறும்.

கொண்டு யாழ். அரசஅதிபர் எடுத்த துரித முயற்சியினால் இம் மா இங்கு எடுத்துவரப் நோக்கி புறப்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

(ச) (சி) (நி)

# கிழக்கில் தேர்தல் நடத்தின் யுத்தத்தில் வெல்ல முடியும்

## ஜெனரல் லக்கி அல்கம தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் நாம் தேர்தலை நடத்தினோமானால் எம்மால் போரில் வெற்றியடைய முடியும் என மேஜர் ஜெனரல் லக்கி அல்கம தெரிவித்துள்ளார். இராணுவ அதிகாரிகள் நிலைத் தலைவராக பதவியேற்ற? — தலைவ்ராக புதிதாக பொறுப்பேற்ற பின்னர் செய்தியாளர்களிடையே பேசும் போதே அல்கம இவ்வாறு தெரிவித்தார்.

அதிகாரிகள் நிலைத் தலைவராகஇருந்த ஜெரி டி சில்வா இராணுவத் தளபதியாக இவ்வருடம் முதல் நியமிக்கப்பட்டதையடுத்து அவரின் இடத்திற்கு கிழக்கு பிராந்திய தளபதியாக இருந்த லக்கி அல்கம நியமிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இதே சமயம் போரை வெல்ல குறிப்பிடத்தக்க கால எல்லை கிடையாதுஎன புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரிடி சில்வா தெரிவித்தார். ஆனால் விரைவில் வெற்றி கிடைக்கும் எனத்தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

# உலங்குவானூர்தி தாக்குதல்; சாவகச்சேரியில் மூவர்காயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில்நேற்று அதிகாலை உலங்குவானூர்தியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட கலிபர் மற்றும் கிரனைட் தாக்குதலுக்கு மூவர் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதிகாலை 5 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போதே இவர்கள் படுகாயமடைந்தனர். இணுவில் கிழக்கைச்சேர்ந்த பி. தியாகராசா (வயது 56), சுன்னாகத்தைச்சேர்ந்த ரி. ராஜமாணிக்கம் (வயது 39) என்ப

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# ஹெலி கொள்வனவு அதிகாரிகள் முரண்பாடு

(கொழும்பு)

சிறிலங்கா விமானப் படைக்கு ரூபா 20 கோடிக்கு மேலான தொகையில் கேள்வி பத்திரம் மூலம் கொள்வனவு செய்யப்படவுள்ள உலங்குவானூர்தி தொடர்பாக விமானப்படை உயர் அதிகாரிகளிடையே கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன.

விமானப்படைக்குத்தேவைக்கான புதிய எம்.ஐ 17-IV இன உலங்கு வானூர்தியை கொள்வனவுக்காக சென்ற ஒக்டோபர். முதல் பகுதியில் கேள்வி கட்டளைகள் கோரப்பட்ட போதும் நவம்பர் 15ஆம் திகதி கேள்விப் பத்திரம் பெறப்பட்டது. இதுவே விமானப் படையின் மேற்படி கருத்து வேற்றுமை

( 4 ஆம் பக்கம் பார்க்க )

மீனவரின் மூன்று படகுகள் சேதமடைந்தன. இயந்திரமொன்று கடலில் தூக்கி வீசப்பட்டது.

இச்சம்பவம் நேற்று காலை 7.30 மணியளவில் சற்கோட்டை கடற்பரப்பில் வைத்து மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்த போது நடைபெற்றது. வெற்றிலைக் கேணியில் இருந்து காங்கேசன்துறை நோக்கி சென்று கொண்டிருந்தகடற்படையினர்முனை, பருத்தித்துறை, திக்கம், பொலிகண்டி, சற்கோட்டை, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு பகுதிகளில் பலத்த பீரங்கித் தாக்குதல்களையும், துப்பாக்கி வேட்டுக்களையும் ஏவியவாறு சென்றனர்

சற்கோட்டையில் கடற்படையினரின் அகோரத் தாக்குதலின் போது முனையைச் சேர்ந்த சந்தியாபிள்ளை இருதயராஜ் (வயது 18), எட்வேட்அன்ரன் உதயகுமார் (வயது 23), திருச்செல்வம் செபஸ்ரி அமலராஜ் (வயது 21), மற்றும் பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து சற்கோட்டையில் தங்கி வசித்த

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# போருக்கு உதவக்கோரி ஹமீட் இம்மாதம் இந்தியா செல்வார்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக இந்தியாவின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு இம்மாதம் வெளிவிவகார அமைச்சர் ஏ சி. எஸ் ஹமீட் இந்தியாவிற்கான பயணமொன்றை மேற்கொள்ள இருப்பதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரிய வருவதாக லங்காதீப குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை இந்தி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

பாதுகாப்பு, நிதிக்கென

# அமைச்சர்களை நியமிப்பதால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை

## டி. பி. விஜேதுங்க

(கொழும்பு)

தனது பொறுப்பின் கீழ் இருக்கும் பாதுகாப்பு மற்றும் நிதிஅமைச்சுகளுக்குதனியான அமைச்சர்களை நியமிக்கப் போவதில்லை என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார். கடந்த வார சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றின்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விவகாரம் பெரியதோர் பிரச்சினையாக எனக்குப்படவில்லை. அதிகாரமுள்ள ஜனாதிபதி தாம் விரும்பிய அமைச்சுகளை தம் பொறுப்பில் வைத்திருக்கமுடியும். முக்கிய இரு அமைச்சுகளான

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# புலிகளின் பிரசாரத்திற்கு எதிராக அரசின் தீவிர கவனம் தேவை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இவ்வாண்டில் இராணுவ நடவடிக்கையை அதிகரிக்கும் அதே சமயம் புலிகளின் பிரசார நடவடிக்கைகளுக்கு எதிராகவும் கூடுதலான கவனம் எடுக்கப்பட வேண்டும் என ஆய்வாளர்கள் கருதுவதாக சண்டே ஐலண்ட் பத்திரிகையில் வெளியான கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளுக்கு எதிராக படை

( 4 ஆம் பக்கம் பார்க்க )

வாரங்களுக்கு [illegible] தேர்தல் நடைபெறும்.

கடந்த டிசம்பர் 31ஆம் திகதி தென் மாகாணசபை கலைக்கப்பட்டது தெரிந்ததே.

# புதை குழிகளை தோண்ட நீதிமன்றம் தடைவிதிப்பு

எம்பிலிப்பிட்டியவில் புதை குழிகளில் இருந்து எலும்புக் கூடுகளை வெளியே எடுக்கும் பணியை எம்பிலிப்பிட்டிய நீதியதி நிறுத்த உத்தரவிட்டுள்ளார் பொலிசார் பொறுப்பேற்று எதிர் வரும் வெள்ளிமுதல் முழு அளவில் கவனமாககுழிகளைதோண்டுமாறு அவர் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக இப் புதைகுழி தோண்டும் பணியில் சுதந்திரக் கட்சி தொண்டர்களே ஈடுபட்டிருந்தமை தெரிந்ததே. தொலைக் காட்சி ஒளிபரப்பு கோபுரம் ஒன்றிற்காக இப் பகுதியில் குழிவெட்டியபோதே இந்த புதைக்கப்பட்ட எலும்புக் கூடுகள் வெளிவந்ததாக கூறப்படுகிறது. நான்கு அடி ஆழத்திலேயே எலும்புக்கூடுகள சிக்கியுள்ள போதிலும் இக் குழிகள் 40 அடி ஆழமானவை என அவ்வூர் மக்கள் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

எம்பிலிப்பிட்டியவில கண்டுபிடிக்கப்பட்ட

# எலும்புக் கூடுகளை ஆராய வெளிநாட்டு நிபுணர்தேவை

எம்பிலிப்பிட்டிய பகுதியில் கண்டெடுக்கப்பட்ட 20எலும்புக் கூடுகளை வெளிநாட்டு நிபுணர்கள் மூலம் ஆய்வுக்குட்படுத்த வேண்டும் என சுதந்திரக் கட்சி எம். பி ஒருவர் கோரியுள்ளார்.

கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் ஒரு சிறுதுளியே இது குறித்து புலனாய்வு செய்ய வெளிநாட்டு உதவி பெறவேண்டும் எனவும் மங்கள சமரவீர எனும் அந்த எம். பி. குறிப்பிட்டார்.

# புதைகுழியை காவல் காக்க பெற்றோர் தீர்மானம்

(கொழும்பு)

சூரிய கந்த் மலைத்தொடரை 24 மணி நேரமும் தொடர்ந்து காவல் புரியப் போவதாக காணாமல் போன பிள்ளைகளின் பெற்றோர் நலன் விரும்பிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கம் தனது முழு பலத்தையும்பாவித்துஇதனை மழுங்கடிக்கும் விதத்தில் நடவடிக்கையில்ஈடுபடலாம் என்றும் இதற்கு யாருடைய பாதுகாப்பையும் நாட முடியாதுஎன்றும் எனவே தாமே முன்னின்று இதனைப் பாதுகாக்க போவதாகவும் அச்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அரசாங்க, தமிழீழ விடுமுறை நாட்கள் அடங்கிய படக் கலண்டர்கள் ரூபா 6/-க்கு எம்மிடம் விலாசம் பதிப்பித்துபெற்றுக்கொள்ளலாம் மற்றும் பெரிய, நடுத்தரக் கலண்டர்களுக்கும் ஸ்ரீலங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகாமை, ஸ்ரீகாந்தா அச்சக லேன், யாழ்ப்பாணம்.

(7140)

### பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம். TASTE LINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenler Lane, Jaffna.

(சி-8249)

### தேவை

யாழ்நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் மருந்தகத்துக்கு கணக்குப் பதிவாளர், கொள்வனவு பொறுப்பாளர் (கொழும்பு சென்று வரக் கூடியவர்), மருந்து விற்பனையாளர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பத்தை 10-01-1994க்கு பிந்தாமல் எழுத்து மூலம் என். தனபாலசிங்கம் 51, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

(7126)

### பற்றறி சார்ஜர் தேவை

பற்றறி சார்ஜர் வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும். யுனிரெக் பொறியியல் நிறுவனம், வெலிங்டன்.

(7146)

### 141-வது ஜென்மதினம்

(வடமராட்சி)

அன்னை சிறி சாரதாதேவியின் 141வது ஜென்மதினத்தை முன்னிட்டு இன்று முதல் ஒரு வாரம் பெருவிழாவாகக் கொண்டாடப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளைப் பருத்தித்துறை சிறீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினர் மேற் கொண்டுள்ளனர். இதனை முன்னிட்டு சாரதா சேவாச்சிரமத்திலும் பொலிகண்டி கந்தவனப் பகுதியிலுள்ள கிளையிலும் பல ஆத்மீக சமய சமூக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

ஜென்ம தினத்தன்று சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ உரையின் நூற்றாண்டு ஞாபகார்த்த மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டப்படவுள்ளது.

## நாகர்கோவில் படகுச் சேவை

(வடமராட்சிகிழக்கு)

நாகர்கோவில் - எழுதுமட்டுவாள் படகுச்சேவை அதிகரிக்கப்பட்டுள்ளது.

பயணிகளின் தொகை அதிகரித்ததையடுத்துசேவைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தொண்டமனாறு கடனீரேரியை ஊடறுத்துச்செல்லும் நாகர்கோவில் - எழுதுமட்டுவாள் வீதி முற்றாக வெள்ளத்தில் மூழ்கியதையடுத்தே இப்படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(36)

முதற் தடவையாக

# A/L 94
# DAY CLASS

## விஞ்ஞானப் பிரிவு

ஆரம்பம் **10-01-94** காலை 8.30 மணி

- திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நான்கு நாட்களும் வகுப்புகள் நடைபெறும்.
- இவ்வகுப்பு பாடசாலை செல்லாத மாணவர்களுக்குரியது.
- முழுப்பாடத்திட்டமும் பூர்த்திசெய்யப்படும்.
- அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

## பொண்ட் இன்ஸ்ரிரியூட்

ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.

(சி-8272)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1994 சனவரி 31 ஆம் தேதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. மருந்தாளர்

(தாழ் தரம்)

...திற்குச் சமமான தொகையும் வழங்கப்படும்.

1993, மே 12-ம் தேதிய 9/93 இலக்க பொதுநிருவாகச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப் படியாக 600/- செலுத்தப்படும். பல்கலைக்கழகப்படியாக மாதாந்தம் 500/- செலுத்தப்படும்

வாழ்க்கைச் செலவுப் படியாக மாதாந்தம் 260/- செலுத்தப்படும்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபா செலுத்திய பின்னர் இப்பல்கலைக் கழகத்தின் தாபனக் கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள்

## 45ஆம் நாள் நீங்காத நினைவுகள்



பிறப்பு:- 1962. 04. 28

வீரச்சாவு:- 1993. 11. 22

### லெப்டினன்ட் கதிரவன் / கிரிமாமா

சின்னையா சிவராசா)

திங்களென இங்கு இலங்கிய தேவனே!
செங்களத்தில் வீழ்ந்திட்ட கதிரவனே
எங்களது விலங்கொடியும்
மங்களமாய் தாயகம் மலரும்
மனமார நீ உறங்கு. உனக்காக
உளமார அஞ்சலிக்கின்றோம்.

குறிப்பு:

05- 01- 1994 புதன்கிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, மதிய உணவு நிகழ்விலும் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புலோப்பளை மேற்கு,
பளை

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(7133)

## 56-வது நினைவு நாளும் அந்தியேட்டி கிரியையும்



வித்தாக: 12-12-1976

விதையாக: 11-11.1993

### வீரவேங்கை செங்கனல்

(வேலுப்பிள்ளை ராஜேஸ்வரன்)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 29-10-1977

தாயக மண்ணில்: 22-11-1993

### வீரவேங்கை நிருபன்

(அருளானந்தம் அரவிந்தன்)

கண்போன்ற விந்தா மண்காக்க சென்றாயோ
பொன்னான மண்ணுக்காய் புலியாகி நின்றாயோ
அந்நாளில் உனக்கிந்த வீரச்சாவோ
மண்மீட்க மரணித்து மாவீரன் ஆனாயோ
மாறாது எம் துயரம் மாளாது உன் கனவு.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, சகோதரர்.

(7057)

## நினைவு கூருகின்றோம்...

## 1994-01-05

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார்-வங்காலைப் பங்குமனைக்குட் புகுந்த சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக்கொல்லப்பட்ட பங்குத்தந்தையும், தலைசிறந்த சமூகப்பணியாளரும், இராணுவ நடவடிக்கைகளினாற் பாதிப்புற்றோரின் மறுவாழ்விற்காக உழைத்தவருமான வண. பிதா,

**மேரி பஸ்ரியன் அடிகளார்**

1986ஆம் ஆண்டு மட்டக்களப்பு - சித்தாண்டிப் பகுதியிற் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**மூத்தவன்** (நாகராசா பத்மநாதன் - வந்தாறுமூலை - மட்டக்களப்பு)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப்படையினர் இரண்டாவது நாளாக மேற்கொண்ட தரை, வான் தாக்குதல்களிற் கொல்லப்பட்ட 09 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், குரும்பசிட்டிப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**ராஜீ** (சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார் - குரும்பசிட்டி - யாழ்)

1988ஆம் ஆண்டு இந்தியப்படையினராற் படுகொலை செய்யப்பட்ட சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த இளைஞன்.

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பு - நாவற்குடாப்

சிக்காக்கோ உரையின் நூற்றாண்டு ஞாபகார்த்த மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டப்படவுள்ளது.

## விபத்தினால் மரணம்

(வடமராட்சிகிழக்கு)

வெள்ளத்திற்குள் தவறி விழுந்த வயோதிபர் ஒருவர் மரணமானார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை (01-01-94) நாகர்கோவிலில் நடைபெற்றுள்ளது

குடாரப்பைச் சேர்ந்த நாகலிங்கம் (வயது 84) என்ற வயோதிபரே மரணமானவராவார்.

தபால் நிலையத்தில் பொதுசன உதவிப் பணத்தைப் பெறுவதற்காகச் செல்லும் போது, பள்ளத்தில் தேங்கி நின்ற மழை வெள்ளத்தில் தவறி வீழ்ந்து மரணமானதாக விசாரணையிலிருந்து தெரியவருகிறது.

செம்பியன் பற்றுப் பிரிவு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. இராசையா மரண விசாரணையை நடத்தி விபத்தினால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளித்தார்.

நாகர்கோவில் காவற்துறையினர் சாட்சிகளை ஆஜர் செய்து, சாட்சியங்களைப் பதிவு செய்தனர்,

(36)


SPOKEN ENGLISH

ஆரம்பம்:

9 - 1 - 94 (8 மணி)

by

BRITTO

புதிய

உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(சி-8285)


றுக் கொள்ளப்படும்.

### 1. மருந்தாளர்

(தாழ் தரம்)

சம்பள அளவுத் திட்டம்;
ரூபா 2890 - 10X55;
7X65 - 3895|-
மாதமொன்றிற்கு

தகைமைகள்:

இலங்கை மருத்துவ அவையினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைபெற்ற மருந்தாளர்தகுதிச்சான்றிதழ்.

வயது:

40 வயதிற்கு மேற்படலாகாது,

தெரிவு:

உளச்சார்பறிதேர்வு, நேர்முகப்பரீட்சை ஆகியனவற்றின் மூலம்.

### 2. தாதி தரம் II

சம்பள அளவுத்திட்டம்:
ரூபா 2890 - 10X55;
7X65 - 3895|-
மாதமொன்றிற்கு

தகைமைகள்:

1. இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் 3 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் க. பொ. த (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. இலங்கை மருத்துவ அவையினால் தாதியாக அங்கீகரிக்கப்பட்டமைக்கான தகுதிச் சான்றிதழ்.

வயது:

40 வயதிற்கு மேற்படலாகாது

தெரிவு:

உளச்சார்பறிதேர்வு, நேர்முகப்பரீட்சை ஆகியனவற்றின்மூலம்.

மேற்குறித்த சம்பளங்களுடன் 1994 திசெம்பர் 31 ஆம் தேதிவரை சம்பளத்தின் 25 சதவீதத்

பட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டும். தபால் மூலம் படிவங்களையும்விபரங்களையும் பெறவிரும்புவோர்யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20|- ரூபா பெறுமதியான காசுக் கட்டளை|தபாற் கட்டளையுடன் 23X10 ச. மீ அளவுடைய சுய முகவரியிட்டு ஒரு ரூபா முத்திரையொட்டப்பட்ட கடிதஉறையையும்அனுப்புதல்வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும். அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள்தமது நிறுவனத்தலைவர்மூலம் விண்ணப்பித்தல்வேண்டும். அரசாங்கச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றவர்களும் இப்பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பிக்கலாம். அவர்களுக்கு வயதுக் கட்டுப்பாடு எதுவும் இல்லை.

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், தெளிவில்லாமல் விபரங்கள் அளிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்,**

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1993.12.30

(சி-8280)

## வீரவேங்கை செங்கனல்

(வேலுப்பிள்ளை ராஜேஸ்வரன்)

செந்தமிழ் மண்ணது செந்நிறமாகையில்
செங்கனல் வேங்கையும் செங்களமாடினான்
பூநகரி பூகம்பத்தில் புயலாக புகுந்தவன்
வரலாறாகியே எம்முடன் வாழ்கின்றான்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தம்பியோடை,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள்.

(7143)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



புவிமடியில்:

1940 - 02 - 21

திருவடியில்:

1992 - 01 - 05

நடன கலாமணி

### திருமதி கனகேஸ்வரி மயில்வாகனம்

(பன்னாலை)

விரிவுரையாளர் (நடனம்)
கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி

ஆறாது ஆறாது அழுதாலும் திராது
நீறாகிப் போன நிலை நினைவிலும் மாறாது
மாறாத அன்பு கொண்டு மகிழ்வுடனே
வளர்த்தாயே
தேறாது நிற்கின்றோம் தேம்பியே நாம் இங்கு.

உம் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

கோப்பாய் தெற்கு.
(7142)

ஏரம்பமூர்த்தி ரமேஸ்
(பெறாமகன்), சகோதரிகள்.

கொலை செய்யப்பட்ட சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த இளைஞன்.

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பு - நாவற்குடாப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**ஜீவன்**

திருக்கோணமலை - மூதூர், ஈச்சிலம்பத்தைப் பகுதியில் தேசவிரோதக் குழுவினராற் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணம்-மாதகல் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லோடர்** (வல்லிபுரம் நடேசபிள்ளை - தாவளை, இயற்றாலை, வரணி - யாழ்)

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பு - ஜெயந்திபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**தேவா** (மரியான் சகாயம் - கல்லடி-மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞன் உட்பட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு சுகவீனங் காரணமாக எமைப் பிரிந்த,

**எழுச்சியன்** (கனகரத்தினம் கமலதாசன் - சித்தங்கேணி, வட்டுக்கோட்டை-யாழ்)

முல்லைத்தீவு- முத்தையன்கட்டுக் குளத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட படகு விபத்தில் எமைப்பிரிந்த,

**பரமானந்தம்-தாஸ்** (சின்னையா புஷ்பராசா- கருப்பட்டைமுறிப்பு, மாங்குளம் - முல்லைத்தீவு)

**சுகுணன்-அப்பன்** (திருநாவுக்கரசு சதிஷ் - கற்சிலைமடு, ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

1993ஆம் ஆண்டு மட்டு மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த,

**லெப். அமுதநிலான்-பிரதாப்** (கணபதிப்பிள்ளை அருள்நாயகம் - எருவில்-மட்டக்களப்பு)

யாழ் - கல்முனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் இராமன்** (ஏரம்பமூர்த்தி டேவிட்-கன்னங்குடா - மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8283)

சிந்தனைக்கு

கொள்ளி கொண்டு தலையைச் சொறியலாமா?
- தமிழ்ப்பழமொழி

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-01-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

## தரகுப்பணத்தில் கொழுக்கும் முதலைகள்

தனது தேசிய வருமானத்தில் ஆயுதக் கொள்வனவிற்கென பெருமளவு நிதியைச் செலவிடும் முன்னணி நாடுகளில் சிறிலங்காவும் ஒன்று. கடந்த நான்கு வருட காலத்தில் பல ஆயிரம்கோடி ரூபாக்களை சிறிலங்கா அரசு ஆயுதக் கொள்வனவிற்கெனச் செலவீடு செய்துள்ளது.

இதேவேளை, ஆயுத வர்த்தகமே உலகில் அதிக நிதி புரளும் வியாபாரம் ஆகும். இதில் மற்றைய சர்வதேச வர்த்தகங்களைவிட இரகசியங்கள் அதிகம். இதன் காரணமாக பணம் கறுப்பு, வெள்ளையாக கைமாற்றப்படுவதுண்டு. இதில் கொம்பனிகள் மட்டுமல்ல அரசுகளே ஈடுபடுவதும் உண்டு. இந்த வகையில் இவ்வர்த்தகத்தில் பெருமளவு தரகுப்பணம், கமிசன் என்பன இரகசியமாகக் கையாளப்படுகின்றன. இதற்கு முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி காலத்தில் இடம்பெற்ற போபஸ் பீரங்கி ஊழலே சிறப்பான உதாரணமாகச் சுட்டிக் காட்டப்படக் கூடியது.

இந்த வகையில் பெருமளவு ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா அரசாங்கத்தின் வர்த்தகத்தில் பெருமளவு தரகுப்பணம், கமிசன் என்பன கைமாற்றப்படுவதைத் தவிர்ப்பதென்பது சிக்கல் நிறைந்ததாகவே இருக்கும், அதிலும் ஆயுத சந்தையில் சிறிலங்கா புதிய வாடிக்கையாளர் ஆகையால் இதில் பலர் தூண்டில் போட்டு இழுக்கப்படுகின்றமைக்கான வாய்ப்புகள் அதிகமாகவே உண்டு.

இதேசமயம் சிறிலங்கா அரசு பெருமளவு ஆயுதக் கொள்வனவு செய்யத் தொடங்கிய எண்பதுகளின் ஆரம்பத்தில் இருந்து மோசடி தொடர்பான குற்றச்சாட்டுகள் உருவாகிய வண்ணமே உள்ளன இதில் அரசியல்வாதிகள், அவர்களின் உறவினர் உட்பட இராணுவ உயர் அதிகாரிகள், அவர்களின்உறவினர்நண்பர்கள்எனப் பலர்குற்றச்சாட்டுக்குள்ளாகியுள்ளனர், இக் குற்றச்சாட்டு முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சரான லலித் அத்துலத் முதலியில் இருந்து, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா, முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்ணா உட்பட தற்போதைய ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சில் உள்ள பலர் மீதும் உள்ளன,

இக்குற்றச்சாட்டுகள் சிறிலங்கா கொள்வனவு செய்துள்ள பலரக ஆயுத தளபாடங்கள் தொடர்பாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக ஆஜென்

## கணித மூலவள நிலையம் திறந்து வைக்கப்பட்டது

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் கணித மூலவள நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

யாழ் வடக்கு பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி நாடாவைவெட்டி திறந்து வைத்தார். வடமராட்சி கிழக்கில் இதுவரை இரண்டு கணித மூலவள நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளன. செம்பியன்பற்று பாடசாலையிலும் கணிதமூலவள நிலையம் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

திறப்பு விழா நிகழ்வில் மருதங்கேணி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.வ. செல்வராசா, கல்விமேம்பாட்டுக் கழகபொறுப்பாளர்திரு. வே. இளங்குமரன், யாழ் வடக்கு பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி ஆகியோர் மங்களவிளக்கேற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன், பாடசாலைக் கொடியை யாழ். வடக்கு பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

(யோ)

## கிழக்கில் தேர்தலை ஒத்திவைக்க அரசியல்வாதிகள் கோரிக்கை

(கொழும்பு)

கிழக்குமாகாணத்திலும் வடக்கில் வவுனியாவிலும் நடத்த உத்தேசித்திருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்குமாறு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியைச்சேர்ந்த கிழக்குமாகாண அரசியல்வாதிகள் சிறிலங்கா ஜனாதிபதி டி பி. விஜேதுங்கவை கேட்டுள்ளனர்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்தக் கூடிய பாதுகாப்பான சூழ்நிலை தற்போது இல்லை என்று ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியிருக்கும் இந்த கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் ஐ. தே கட்சியைப் பொறுத்த வரை இத்தேர்தலுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறியிருக்கின்றனர்.

ஆனால் இத்தடவை தேர்தலை ஒத்திவைக்கும் உத்தேசம் எதுவும் தனக்கு இல்லையென்றும் ஜனாதிபதி விஜேதுங்க இவர்களிடம் கூறியதாகவும் தெரியவருகிறது.

உள்ளூராட்சி தேர்தல்களுக்கான ஐ. தே. க. வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருவதாக கட்சியின் பொதுச்செயலாளரான வீடமைப்பு நிருமாணத்துறை அமைச்சர் சிறிசேன குரே தெரிவித்தார்.

## பெற்றோரின் அனாவசிய தலையீடு பாடசாலையில் தவிர்க்கப்பட வேண்டும்

### யாழ். வடபிரதேச கல்விப்பணிப்பாளர்

(வடமராட்சி)

''கல்வி சம்பந்தமான சில விடயங்களில் பெற்றோர்கள் தலையிடுவது ஆசிரியர் சமுதாயத்தின் மனநிலையை குழப்பத்தில் ஆழ்த்திவிடும். அனாவசியமான வகையில் பெற்றோர் தலையிடுவது தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.''

அம்பன் அமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் பாடசாலை அதிபர் திரு. மு. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் யாழ். வடக்கு பிரதேச கல்விப்பணிப்பாளர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கணித மூலவள நிலையத்தை திறந்து வைத்து ஆற்றிய உரையின் போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஊரின் வளர்ச்சியைக் கொண்டுதான் அங்குள்ள கல்லூரிகளின் வளர்ச்சியைக் கணக்கிட முடியும். அந்த வகையிலே இங்குள்ளகிராமத்தின் வளர்ச்சியைக் கொண்டுதான் கல்லூரிகளின் வளர்ச்சி காணப்படுகிறது.

எங்களிடம் இருக்கின்ற வளங்களைக் கொண்டுதான் கல்வி வளர்ச்சியைப் பெருக்க முடியும். கல்வித் திணைக்களம் தரும், கல்விப்பணிப்பாளர் தருவார், உத்தமர்கள் தருவார்கள் என்று எதிர் பார்த்தால் பிள்ளைகளின் கல்விக் காலம் வீண்போய் விடும், இங்குள்ள பாடசாலைகளுக்கு மக்களாகிய நாங்கள் சிறுசிறு பொருட்களாக கல்வித் தேவைக்குரியவற்றை செய்து கொடுக்கவேண்டும். கணித மூலவளங்கள், விஞ்ஞான மூலவளங்கள், பிள்ளைகளின் கல்வித்தரத்திற்கு முக்கியமானது,

கல்வி நிர்வாகத்தில் இராணுவ நடவடிக்கை கலந்திருக்கவில்லை. இது தெளிவான ஒரு நிர்வாகம். பெற்றோர், ஆசிரியர்கள் அதிபர்களின் மனங்களை கோணவைக்கக் கூடாது. கணித பாடம் படிக்கும் பிள்ளைகளுக்கு இன்று வழங்கப்பட்ட கணித மூலவளம்மங்களமானவிடயம்

மருதங்கேணி கல்விக்கந்தோர் அமைக்கும் விடயத்தில் பெற்றோர்கள் தலையிடுவது அர்த்தமற்றது. இவ் அலுவலகம் இங்கு அமைவது கல்வித்தேவைக்கு இவ் அலுவலகம்அமைப்பதில் சர்ச்சையிருக்கக்கூடாது கல்விக்கந்தோர் அமைப்பது பெருமைக்காக அல்ல கல்லூரி வளர்ச்சிக்காகத்தான். பெற்றோர்கள் எங்களிடம் வந்து குழப்பத்தை உண்டு பண்ணக் கூடாது. பிள்ளைகள் பற்றி தேவையேற்படுமாயின் நாங்கள் உங்கள் வீடுகள் தேடி வருவோம். கல்லூரியில் ஏற்படும் தேவைகளுக்கு பெற்றோரின் ஒத்துழைப்பு வேண்டும். ஆசிரியர்களின் நம்பிக்கையைப் பெறுவோம். உயர்தர மாணவர்கள்பலரையும் உருவாக்குவோமென்று அவர் மேலும் தெரிவித்தார்.

(யோ)

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்

## வடமராட்சி கிழக்கில் எவரும்சித்தியடையவில்லை

(வடமராட்சி)

கடந்த ஆண்டு நடைபெற்ற ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் தோற்றிய மாணவர்கள் எவரும் சித்தியடையவில்லை.

இப்பகுதியில் 17 பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் தோற்றிய போதிலும் எவரும் சித்தியடையாதது பெற்றோர் மத்தியில் கவலையை உண்டுபண்ணியுள்ளது.

இப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் வெளியிடங்களில் கல்விபயின்று இப்பரீட்சையில் தோற்றியுள்ளனர். கல்வித் தரம் இங்கு குன்றிப் போக போதிய கல்வி வளங்கள் இல்லாததே மூலகாரணமாக உள்ளது.

போதிய ஆசிரியர்கள், தளபாடங்கள், கட்டடவசதிகள் இல்லாததே கல்வி வளர்ச்சிக்கு தடைக்கல்லாக இருந்து வருகிறது.

1992ஆம் ஆண்டு நடைபெற்ற இப்பரீட்சையில் இப் பகுதியில் இருந்து ஒரு மாணவர் சித்தியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (யோ)

### இலவச வகுப்புக்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தொல்புரம் பாபு கல்வி வளர்ச்சிக் கழகத்தில் 1994 ஆம் ஆண்டிற்கான புதிய இலவசவகுப்புக்கள்இன்றுபுதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேலும் இக்கல்விவளர்ச்சிக் கழகத்தில் ஆண்டு 1முதல் ஆண்டு 11 வரை ஆரம்பிக்கப்படவுள்ள இலவச வகுப்புக்களில் கல்வி பயில விரும்பும் மாணவர்கள் அனைவரையும் இன்று மாலை 3.00 மணிக்கு சமூகமளிக்குமாறு மேற்படி கழகத்தின் சார்பில் பொறுப்பாசிரியர் கோ. சதாருபன் அவர்கள் கேட்டுள்ளார்.

(41)

## தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் மேலும் பல புதிய பயிற்சி நெறிகளை நடத்த

இப்போது மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

விசேட

## விமானக் குண்டு வீச்சுக்கள் சர்வதேச விதிகளுக்கு முரணானது

(கொழும்பு)

வடக்கில் பொது நிலையங்கள் மீது தொடர்ந்து நடத்தப்படும் விமானக் குண்டு வீச்சுக்கள் எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாதவை என்றும், இவை சர்வதேச போர் முறைகளுக்கு முற்றும் முரணான ஒரு செயலாகும் என்றும் தமிழ் எம்.பி. ஒருவர் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கவனத்

படும் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. சர்வதேச போர் விதிகள் குண்டு வீச்சுக்களின் போது பொது ஸ்தாபனங்கள் தவிர்க்கப்படல் வேண்டும் என கண்டிப்பாகக் கூறுகின்றது. ஆனால் சர்வதேச விதிமுறைகளுக்கு முரண்பாடான முறையில் வட பகுதியில் வணக்க ஸ்தலங்கள்,

கின்றதேயொழிய எந்தவகையிலும் இரு நாடுகளுக்கிடையில் போர் நடைபெறவில்லை இரு நாடுகளுக்கிடையில் போர் நடைபெறும் பொழுது கூட இது போன்ற பொதுஸ்தாபனங்களைத் தவிர்த்து குண்டு வீசப்படுதல் வேண்டும் என்று சர்வதேச போர் முறைகளின் விதிகள் கூறும் பொழுது எமது நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக

[illegible] ஆயுத தளபாடங்கள் தொடர்பாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக ஆஜென்டீனாவில் கொள்வனவு செய்த புக்காரா விமானங்கள் முதல் எம். ஐ. - 17 உலங்குவானூர்திகள், டாங்கிகள், பீரங்கிப் படகுகள் என மோசடிக் குற்றச்சாட்டுகளுக்கு நீண்ட பட்டியல் உள்ளது. இதில் விநோதம் என்னவெனில் சிலரக பீரங்கிகள் இல்லாத நிலையிலும் அப் பீரங்கிகளுக்கென எறிகணைகளைக் கொள்வனவு செய்யும் அளவிற்குக்கூட ஆயுதக்கொள்வனவில் மோசடி இடம் பெற்றிருந்தமைதான்.

ஆனால் இதுவரை இது தொடர்பான பல குற்றச்சாட்டுகள் வெளிவந்துள்ள போதிலும், இவை தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றதாகவும் அன்றி யாரும் தண்டிக்கப்பட்டதாகவோ இல்லை என்பது மட்டுமல்ல, யாரும் அலட்டிக் கொண்டதாகவும் இல்லை. ஆனால் மற்றவர்கள்மீது குறைகாண்பதற்காக மட்டுமே இம்மோசடிகள்சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அதற்குமேலால் எள்ளளவும் இவ்விவகாரம் செல்லவில்லை. அவ்வாறு செல்லப்போவதும் இல்லை.

ஏனெனில் இம்மோசடிகளில் கைகளை நனைத்தவர்கள் ஒருசிலர் மட்டுமல்ல; அடியில் இருந்து அந்தலை வரையுள்ள இராணுவ அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள், உயர்நிலை அரசியல்வாதிகள் எனப் பலர் அடங்குவர் என்பதினாலேயே ஆகும். இந் நிலையில் விசாரணைக் குற்றச்சாட்டு என்பவை உயர் நிலையில் உள்ள பலரது முகமூடிகளைக் கிழித்துவிடக் கூடும் இந்நிலையில் விசாரணையின் மூலம் சிலர் பழி வாங்கப்படுவார்களேயானால் அவர்கள் மற்றவர்களின் மோசடிகளை வெளியிடுவதற்கு எப்பொழுதுமே தயார் நிலையில் இருப்பர் என்பது எதிர்பார்க்கக் கூடிய தொன்றே.

இதனால் யுத்தம் நீடித்துச் செல்லச்செல்ல அரசின் பணத்தில் ஒரு சிறு தொகுதியினர் பெரும் செல்வந்தராவது தவிர்க்க முடியாததே ஆகும். அதிலும் மோசடியாலும், ஊழலாலும் கைநனைத்துள்ள அரசாங்கம் ஆட்சியில் இருக்கும்போது அவர்களின் கை எப்பொழுதும் பலமானதாகவே இருக்கும்.

இதேவேளை மக்களின் பணத்தில் பெரும் சுகம் அனுபவிக்கும் இக்கூட்டம் எப்போதும் சமாதானம், அமைதி என்பனவற்றிற்குமுட்டுக்கட்டையாகவேஇருக்கும் அதாவது ஆட்சியாளர்களுக்கு தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள யுத்தம் தேவையானதாக இருப்பதுபோல் ஆயுதக் கொள்வனவால் பெரும் பணம் சேர்க்கும் ஆயுதத் தரகர்களுக்கும் கமிசன் பெறும் உயர் மட்டத்தினருக்கும் யுத்தம் தேவையானதாகவே உள்ளது, இவ்விருவரும் சேர்ந்துள்ள இன்றைய நிலையில் சமாதானம், பிரச்சினைக்கு தீர்வு என்பதெல்லாம் பேச்சளவில் மட்டுமே கேட்க முடியும்

---

[illegible] பயிற்சி நெறிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதற்கான சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். தொழில்நுட்ப கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

இதற்கான முதல் கட்டமாக இவ் வருடம் வர்த்தக நிதி தகுதிப் பத்திரத்திற்கான பயிற்சி நெறி ஆரம்பிக்கப் பட இருப்பதாகவும், மேலும் சில பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் இடவசதி பற்றாக்குறையாக இருப்பதாகவும் இவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை தாம்

## விசேட பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆங்கில மருந்துவர்த்தக சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ் வர்த்தகர் சங்கப் பணிமனையில் உபதலைவர் திரு பாலிங்கநாதன்தலைமையில் நடைபெறவிருக்கிறது. யாழ் மாவட்ட அரசியல்துறையினரும் இக்கூட்டத்தில் பங்குபற்ற உள்ளனர் இதேவேளை முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளதால் பொதுச்சபை உறுப்பினர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

---

துங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

இது சம்பந்தமாக ஜனாதிபதி பிரதமர் ஆகிய இருவருக்கும் அவ் எம்.பி. அனுப்பி வைத்துள்ள அவசர தந்தியில் தெரிவித்துள்ளதாவது:- சாவகச்சேரி பகுதியில் கடந்த 30-ம் திகதி போடப்பட்ட குண்டுவீச்சில் பத்துப்பேர் மரணமடைந்துள்ளனர் என்றும் சுமார் 50 பேருக்கு அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் இன்றுஎனக்குக்கிடைக்கப் பெற்ற தகவல்கள் மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

வடக்கில் தொடர்ந்து பொது இடங்களில் போடப்பட்டுயில் வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்றவற்றில் பல தடவை குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்க ஓர் விஷயமாகும்.

அண்மைக் காலங்களில் யாழ்ப்பாண சென்.ஜேம்ஸ் தேவாலயம், கிளிநொச்சி வைத்தியசாலை, யாழ்ப்பாண செயலகம், சந்தைகள் போன்ற பொது இடங்களில் குண்டு வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டு பலர் மேற்படி குண்டு வீச்சுக்களில் பலியானதுடன் பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

இந் நாட்டில் ஓர் இனப் போராட்டமே நடைபெறு தமிழ் மக்களுக்கு எதிராக தொடரப்பட்டிருக்கும் இத் தாக்குதல்களை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

எனவே தொடர்ந்து இது போன்ற கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்கள் நடைபெறாத வண்ணம் தடுத்து நிறுத்தும்படி தமிழ் பேசும் மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

---

## வெங்காயச்செய்கை பாதிப்பு

(வடமராட்சிகிழக்கு)

வடமராட்சிகிழக்கில்வெள்ளப் பெருக்கினால் வெங்காயப் பயிர்ச் செய்கை பாதிப் படைந்துள்ளது. (36)

---

# ரபானி அரசைக் கவிழ்க்க சதி முயற்சி; 70 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் அதிபர் புர்கானுதீன் ரபானியைப் பதவி நீக்கம் செய்வதற்கான முயற்சியொன்றை ஆப்கான் அரசாங்கத் துருப்புகள் முறியடித்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது உஸ்பேஸ் இனக் குழுவின் தலைவரான ஜெனரல் தோஸ்த் தாமின் தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சியை அரசாங்கத் துருப்பினர் முறியடித்ததாக கூறப்படுகின்றது. இந்த சதி முயற்சிக்கு தற்போதைய பிரதமரான குல்புதீன் கேக்மத்தியாரும் உடந்தையாக இருந்ததாகவும், அவரது பதவியின் எதிர்காலம் குறித்து அதிபர் ரபானி முடிவு செய்வார் என்றும் மேலும் கூறப்படுகிறது.

இதேவேளை காபூல் நகரப் பகுதிகளில் இடம்பெற்ற சண்டைகளில் சுமார் எழுபது பேர் கொல்லப்பட்டதாகவும் எழுநூறுக்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்திருக்கின்றன.

---

## பேச்சு ரத்து

(மியான்மார்)

சக்மா பழங்குடியினரை மீள குடியமர்த்துவது தொடர்பாக. பங்களாதேசம் மற்றும் மியான்மார்அரசுகளுக்கு இடையே நடைபெற விருந்த உத்தியோக பூர்வபேச்சுக்களைமியான்மார் அரசு ரத்துச் செய்துள்ளது.

இந்தக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டமைக்கான காரணம் எதுவும் அறிவிக்கப்படவில்லை என்பதுடன் மீண்டும் இக்கூட்டம் எப்போது நடைபெறும் என்பது பற்றியும் அறிவிக்கப் படவில்லை.

---

# சியாச்சென் பகுதி குறித்து இந்தியா புதிய யோசனை வைக்கும்

## வெளியுறவுச் செயலர் டிக்சிற்

இருதரப்பு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்த இந்தியாவும் பாகிஸ்தானும் இணக்கம் தெரிவித்துள்ளன.

இஸ்லாமாபாத் சென்று பாகிஸ்தானிய வெளியுறவுச் செயலர் சகரியாகானுடன் பேச்சுவார்த்தை நடத்திய இந்தியவெளியுறவுச் செயலர் ஜே. என் டிக்சிற் புதுடில்லி திரும்பிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், இந்திய-பாகிஸ்தானிய உறவுகளை சீர்ப்படுத்த சியாச்சென் பனிப்பகுதி மற்றும் சேர்க்கிறீட் தொடர்பாக இந்தியா புதிய யோசனைகளை தெரிவிக்கும் என்றும், இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை தொடர்பான விடயங்களை விளக்கஇருப்பதாகவும், காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்கும் வழிவகையைக் கண்டறிய இருதரப்பும் இணங்கி இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜே என். டிக்சிற் இஸ்லாமாபாத்தில் இருந்தபோது பாகிஸ்தானின் பிரதமர் திருமதி பெனசிர் பூட்டோ மற்றும் வெளியுறவு அமைச்சர் சர்தார் ஆசிப் அலி ஆகியோரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பாபர்மசூதி விவகாரம்

# பாரதீய ஜனதா தலைவர்கள் ஆஜராவதற்கு விலக்கு

(டில்லி)

அயோத்தியாவில்சர்ச்சைக்குட்பட்ட கட்டடப்பகுதியை உடைத்து நாசமாக்கியமை தொடர்பான வழக்கை விசாரணை செய்துவரும் சிறப்பு நீதிமன்றம் பாரதீய ஜனதா தலைவர்களான எல். கே. அத்வானி, முரளிமனோகர் ஜோஷி, கல்யாண்சிங் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளித்துள்ளது. சி. பி. ஐயைச் சேர்ந்த விஜேவர்மா, விஷ்வ இந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்ஹல் ஆகியோரும் இது தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராவதிலிருந்து விலக்களிக்க நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

இந்த வழக்கு விசாரணை இம் மாதம் பதினைந்தாம் திகதிவரை ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

# மொஸ்கோவிற்கு கூட்டிச் சென்று மோசடி புரிவோர் பற்றி விசாரணை

## வெளிநாட்டமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து மொஸ்கோவிற்கு ஆட்களைக் கூட்டிச் சென்று மோசடியில் ஈடுபடுவோர் பற்றி விசாரணைகள் வெளிநாட்டமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ரஷ்ய எல்லையை கடந்து செல்லவும், மேற்கு நாடுகளுக்கு வேலைகள் செய்யவும் என அழைத்து செல்வதாக கூறி பெருமளவான இலங்கையர் மோசடிப் பேர்வழிகளால் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் தலா இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட தொகையை இம்மோசடியினால் இழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேற்கு நாட்டிற்கு குடிபெயர விரும்பும் இலங்கையர்களுக்கு இந்த இடம் முக்கியமான இடமாக தற்போது விளங்குகிறது. பெருமளவிலான இலங்கையர் தற்போது மொஸ்கோவில் பரிதவிப்பதாகவும் இவர்கள் அந்நாட்டின் சட்ட நடவடிக்கையை எதிர்நோக்கி இருப்பதாகவும் வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது.

### புலமைப் பரிசில் சித்தியடைந்தோர்

# பிரபல பாடசாலையில் மார்ச்சிற்குள் அனுமதி

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மார்ச் மாதத்தினுள் பிரபல பாடசாலைகளில சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இப்பரீட்சையில் 19 ஆயிரம் மாணவர்கள் நாடு முழுவதிலும் சித்தி பெற்றனர். 7,500 மாணவர்கள் புலமைப்பரிசிலாக மாதாந்தம் 240 ரூபாவைப் பெறுவர்.

மாணவர்கள் பரீட்சையில் தாம் பெற்ற புள்ளியின் அடிப்படையில் தாம் சேர விரும்பும் பாடசாலையின் பெயரையும் மற்றும் விபரங்களையும் கல்வி அமைச்சின மாதிரி விண்ணப்பப் படிவத்தில் நிரப்பி தம் பாடசாலை அதிபர்கள மூலம் இம்மாதம் 14 ஆம் திகதிக்கு முன்பாக கல்வி அமைச்சுக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

# வடபகுதியில் புலிகள் கல்வியை சிதைப்பதில்லை

## உயர்கல்வி அமைச்சர் அநுரா தெரிவிப்பு

(கொழும்பு)

''நான் உயர்கல்வியமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிலகல்வியாளர்களைச்சந்தித்தேன். அவர்கள் மூலம் நான் ஒரு செய்தியை அறிந்தேன். விடுதலைப் புலிகள் வடபகுதியில் கல்விமுறையை சீர்குலைப்பதில்லை என அவர்கள் எனக்கு கூறினர்.'' இவ்வாறு புதியஉயர்கல்விஅமைச்சர் அநுராபண்டாரநாயக்கா 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

''ஒருசமயம் பகிஷ்கரிப்பு மேற்கொளளப்பட்ட போது விடுதலைப்புலிகளின் தலைவர்கள் மாணவர்களை வற்புறுத்தி பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்தனர். இது அனைவருக்கும் நல்லதொரு பாடம். இதை ஜே. வி. பி. செய்யவில்லை. அவர்கள் மாணவர்களின் கல்விக்கு தடையாக இருந்தனர். அவர்கள் (ஜே வி.பி) போய்விட்டனர். ஆனால் அவர்களின் இந்தக் கொள்கை இன்னமும் எம்மத்தியில் இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

### ஆசியாவில்

மான சிறிலங்கா இராணுவத்தினர் முடமாக்கப்படும், காணாமல்போயும்உள்ளனர்

இது 1977 ஆம் ஆண்டில் சிறிலங்கா இராணுவத்தில் உள்ள தொகையைவிட அதிகம். இதனால்இராணுவத்தில் பாதிப்பு ஏற்பட்டுளளது.

நான் ஏன் ஓய்வு பெறுகிறேன் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும் பூநகரியில் ஆள், ஆயுத இழப்புகளுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். குறிப்பாக நான் முன்பு கவசப்படையில் தளபதியாக பணியாற்றியவன் என்ற வகையில் இரு சிறந்த டாங்கிகளை இழந்தது குறித்து மிகவும் வெட்கப்படுகின்றேன். இதுமட்டுமல்ல வேறு சில காரணங்களினாலும் நான் ஓய்வுபெற முடிவு எடுத்தேன்.

ஆள்பற்றாக்குறை காரணமாக வடக்கிலும், கிழக்கிலும் ஒரே சமயதல் நடவடிக்கைகளை மேற்கொளள முடியாதுள்ளது. இதனாலேயே மேலும 9 புதிய பட்டாலியன்களை உருவாக்க அரசிடம கோரினேன். இவர்களுக்கான பயிறசிநடைபெறுகிறது. இவர்கள ஒரே சமயத்


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 04 - 01 - 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 58

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

28-3890, 27-7440, 26-4809. 26-7286, 27-6741 28-4183 24-9676, 24-1250, 22-3611, 24-5069 24-8079, 24-0207, 26 2979.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

41-9663, 28-1928. 26-7187. 43-4045, 24-4701 24-8714, 42-9326, 24-5036, 24-4664.


## பிறமொழி ஆசிரியர் தேவை

### பரீட்சை பின்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 20ஆம்திகதி நடைபெறவிருந்த கணக்காளர் 11/11 தரத்திற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை பின் போடப்பட்டுள்ளது பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும், ஏற்கனவே அப்பரீட்சைக்கு அனுப்பப்பட்டுள்ள அனுமதி அட்டை இனி நடக்கப் போகும் பரீட்சைக்கும் செல்லுபடியாகுமென பரீட்சை ஆணையாளர் அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

(சி,ச)

### போருக்கு

யாவிடம் ஒப்படைப்பது தொடர்பாகவும் இப்பேச்சு வார்த்தைகளின்போது ஆராயப்பட இருப்பதாக லங்காதீப தெரிவிக்கின்றது.

அண்மைக்காலத்தில் இந்திய அமைதிகாக்கும்படையை மீண்டும் இலங்கைக்கு கொண்டுவருவது தொடர்பாக அரசாங்க உயர்மட்டத்தில் சிலர் விரும்புவதாக அறியவருகின்றது.

இருந்தபோதும் எந்த ஒரு வெளிநாட்டு இராணுவத்தையும் வடக்கு கிழக்கு பகுதிகளில் பிரச்சினைக்கு பயன்படுத்தப்பட மாட்டாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

எதுஎப்படி இருந்தபோதும் வடக்கு, கிழக்கு பிரச்சினைத் தீர்வுக்கு இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படும் என்றும் அது எந்தவகையான ஒத்துழைப்பு என்பதைவெளிநாட்டுஅமைச்சரின் இந்திய விஜயத்தின் பின்னரே முடிவு செய்யலாம் என அமைச்சு வட்டாரம் மேலும் தரிவித்துள்ளது

### கடற்படை

வர்களான செபதேஸ் அந்தோனிப்பிள்ளை(வயது 22), சின்னப்பொடி பாலசிங்கம் (வயது 40), தியோகுப்பிள்ளை அன்ரன் ஜேசுதாஸ் (வயது 29), ஜக்கிரிகாஸ் எட்வேட் இராசநாயகம் (வயது 26), சின்னத்துரை தியாகராசா (வயது 36). தேவதிரவியம் ஜெயரட்ணம் (வயது 21) ஆகியோரே பலியானவர் ஆவர்.

இவர்கள் சென்ற படகுகள் மூன்று சேதமடைந்தன. ஒரு படகினுள் சந்தியாபிள்ளை இருதயராஜ் இறந்து கிடந்தார். இவரது சடலமே மீட்கப்பட்டது. மற்றைய எட்டு மீனவர்களும் கடலில் குதித்து நீந்திக் கொண்டிருந்த போது

# இனப்பிரச்சினைக்கான தீர்வு எதையும் ஏற்கத்தயாராய் உள்ளோம்

## கனிஷ்ட இராணுவ அதிகாரிகள்

(கொழும்பு)

அரசு முன்வைக்கும் இனப் பிரச்சினைக்கான எந்தத் தீர்வையும் நாம் ஏற்கத் தயாராக உள்ளோம் நாம் அதற்கு முட்டுக்கட்டையாக இருக்க மாட்டோம் - இவ்வாறு இளம் இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி ஐலண்ட் பத்திரிகையில் ஜிகான் பெரேரா எழுதியுள்ளார்.

முகாம்களை மூடிவிட்டு வெளியேறும்படி எமக்குக் கூறிவிட்டு ஓரிரு மாதங்களுக்குப்பிறகு மறுபடியும் அந்த இடங்களைப் பிடிக்கும்படி உத்தரவிடக்கூடாது. முன்பு பல உயிர் இழப்புகள் மத்தியில் மீளவும் அந்த இடங்களைக் கைப்பற்றும் நிலை ஏற்பட்டது அப்படியான ஒரு சந்தர்ப்பம் மீளவும் ஏற்படக்கூடாது என்று அந்த அதிகாரிகள் கூறியதாக அவர் மேலும் எழுதியுள்ளார். இளம் இராணுவ அதிகாரிகளுடன் ஒரு தனிப்பட்ட சந்திப்பின்போது அவர்கள் இவ்வாறு கூறியதாகவும் அவர் எழுதியுள்ளார்.

### அமைச்சர்களை

பாதுகாப்பையும் நிதியையும் எனது பொறுப்பில் வைத்திருப்பதென முடிவு செய்துள்ளேன். இதில் என்ன தவறு உள்ளது? என ஜனாதிபதி அப்பேட்டியில் தெரிவித்தார்.

உலகப்பொருளாதார நிலைமையினாலும் பாதுகாப்பு துறைக்கு பெரியளவிலான நிதி ஒதுக்கவேண்டியுள்ளதாலும் நம் நாட்டுப் பொருளாதாரம் நல்லநிலைமையில் இல்லை. பாதுகாப்பை எடுத்துக்கொண்டால் பாதுகாப்பு அமைச்சர் ஒருவரை நியமிப்பதன் மூலம் இப்போதைய நிலையை சீராக்க முடியும் என நான் நினைக்கவில்லை அல்லது நிலைமை மேலும் மோசமாகலாமோ தெரியாது என ஜனாதிபதி விஜேதுங்க அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பான அநேகமாக அனைத்து விடயங்களுக்கும் திருப்திகரமான தீர்வு கண்டாயிற்று, என ஜனாதிபதி விஜேதுங்க குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கிற்கு மட்டும் அதிகாரம் பகிர்ந்தளிக்க முடியாது. எல்லா பிரஜைகளும் சமமான உரிமைகளை பெற வேண்டும். சிறுபான்மையினரை சிறப்புமிக்க பிரஜைகளாக்குவதையும் பெரும்பான்மையினரை இரண்டாந்தர பிரஜைகள் ஆக்குவதையும் என்னால் ஏற்கமுடியாது

### புலிகளின்

யினர் நடத்தும் போருக்கு படையினருக்கு ஆதரவாக முழுமையான அரசியல் ஆதரவை தேடும் முயற்சி தற்போது மேற்கொள்ளப்படுவதாக எயர் வைஸ் மார்ஷல் மென்டிஸ் கூறுகின்றார். இவருடன் ஏனைய நான்கு முன்னாள் தளபதிகள பாதுகாப்பு நிலைமைகளை சீராக்குவது தொடர்பான பல ஆலோசனைகளையும், சிபார்சுகளையும் ஜனாதிபதி டி. பி விஜேதுங்கவிடம் அவரின்பணிப்பின்

எனவும் அவர் உறுதிபடக் குறிப்பிட்டார்.

இப்பிரச்சினையை சிலர் இனப்பிரச்சினை என்கின்றனர். அதுவல்ல என்று நான் கூறுகிறேன். இனப்பிரச்சினையாக இருந்தால் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து தமிழர்கள் விரட்டப்பட்டிருப்பார். ஆனால் தமிழர்கள் ஏனைய சமூகத்துடன் ஒன்றாக வாழ்வதை அனைவரும் அறிவர். வடக்கு மாகாணத்தில் சிங்களம் பேசும் மக்கள் இருக்கின்றனரா? இன்றைய நிலையில் ஒருவர் கூட இல்லை என ஜனாதிபதி விஜேதுங்க அப்பேட்டியில் குறிபபிட்டார்.

### புதை குழியை

சங்கம் தெரிவித்துள்ளது.

புதைகுழியில் 4 அடியைத் தோண்டும் போது 20க்கு மேற்பட்டவர்களின் எலும்புகளை பெறக் கூடியதாக இருந்ததாகவும் இக்குழிகள் 40 அடி நீளமானவை என்றும் இதில் 300க்கு மேற்பட்டவர்கள் புதைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## 31-ம் நாள் நினைவஞ்சலி

### சின்னத்தம்பி பொன்னையா

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 19-5-1927 | 6-12-1993 |

புங்குடுதீவு 7-ம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி பொன்னையா 06.12.93 இல் புங்குடுதீவில் காலமானார். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை இன்று (5.1 94) புதன்கிழமை 58/1 நாவலர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இக்கிரியைகளில் கலந்துகொண்டு அவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

தகவல்:

58/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

புதுமைலோலன் (குண்டன்) (மகன்)

(7147)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



ஸ்பானிஷ், பிரெஞ்சு, ஜேர்மன், ருஷ்யன், ஜப்பான் போன்ற சர்வதேச மொழிகளைத் தமிழ் மூலம் கற்பிக்க அனுபவசாலிகள் தேவை. தகைமைச் சான்றிதழ்களுடன் 10 - 01 - 94 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி:
விளம்பர இலக்கம் - 305
ஈழநாதம், யாழ்ப்பாணம்.

(7193)

# எடிசன் அக்கடமி

(யாழ் இந்துக்கல்லூரி அருகாமையில்)
411/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## கல்வி ஆண்டு 1994

## ஆண்டு 4 முதல் O/L வரை

யாழ் திறமைமிகு ஆசிரியர் குழுவின்
இணைந்த சேவை

| | | |
|---|---|---|
| கணிதம் | : | திரு. B. P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | ) | திரு. இரா, செல்வவடிவேல் |
| | ) | திரு. J. J கொலின்ஸ் |
| ச.கல்வி | : | திரு. K. S. முத்துலிங்கம் |
| தமிழ் | ; | திரு. தங்கவேல் - S. கதிர்காமத்தம்பி |
| ஆங்கிலம் | : | திரு மனோரஞ்சன் |
| வர்த்தகம் | : | திரு விக்கி |
| சமயம் | : | திரு. கோ. இராஜலிங்கம் |

ஆரம்பம்:

**06-01-1994 வியாழன் பி ப. 4 மணி**

குறிப்பு:

- O/Lஇற்குகணிதம், விஞ்ஞானம் 8-ம்மாதம் பாடத் திட்டம் பூர்த்தியாக்கப்படும்.
- 18 வருட வினாக்கள் மீட்கப்படும்.

(சி-8281)

கிறது இவர்கள் ஒரே சமயத்தில் வடக்கிலும், கிழக்கிலும் தாக்குதல் நடத்த உதவியாக இருப்பர் என நான் நம்புகின்றேன் என சிசில் வைத்தியரெட்னா தனது நீண்ட பிரியாவிடை உரையின்போது குறிப்பிட்டார்.

### புதிதாக

போர்முறை குறித்தும் படையினருக்கு போதிய பயிற்சி வழங்க வேண்டும். பிராந்திய இராணுவத் தளபதிகள் சுயமாக செயற்படக்கூடியதாக இராணுவத் தலைமை சீரமைப்பு இருக்க வேண்டும். அரசியல் தலையீடுகள் இராணுவத்தில் குறைக்கப்படல் வேண்டும். படைப் பிரிவுகளிடையே அனைத்து மட்டங்களிலும் ஒத்துழைப்பு உருவாக்கப்படல் வேண்டும். அனைத்து வளங்களையும் நகர்த்தக் கூடிய வகையில் பாதுகாப்பு அமைச்சு முக்கிய பங்காற்ற வேண்டும் எனவும் சில ஆலோசனைகள் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### தமிழீழ

மாவட்டத்தின் புதிய கல்விக் கோட்டங்களின் இன்று வெளியாகின்றன, வன்னிபபகுதிக்கான பெறுபேறுகள் ஒருவார காலத்தில் அவ்வக் கோட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட இருக்கின்றன.

இத்தேர்வில் எட்டுப்பாடங்களிலும் சிறப்புத் திறமை (D) சித்திகளை பின்வரும் பாடசாலைகளின் மாணவர்கள் பெற்றுள்ளனர்,

ஹாட்லிக் கல்லூரி இரு மாணவர்கள்; வேம்படி மகளிர் கல்லூரி இரு மாணவிகள்; சுண்டுக்குளி மகளிர் கல்லூரி இரு மாணவிகள்; உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஒரு மாணவி; பரியோவான் கல்லூரி; ஒரு மாணவன்; யாழ். இந்துக் கல்லூரி ஒரு மாணவன்.

நீந்திக் கொண்டிருந்த போது கடற்படையினர் இலக்கு வைத்து சுட்டதில் பலியாகினர். இவர்களது சடலங்கள் நேற்று மாலை வரை கரை ஒதுங்கவில்லை. எனினும் தேடுதல் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் சற்கோட்டைப் பகுதி எங்கும் அழுகுரல்கள் கேட்டவண்ணமிருந்தன.

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் ஒரு படகு மீது கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதில் படகு ஒன்று முற்றாகச் சேதமடைந்தது. படகில் இருந்த பா. சிங்காரம், செ. குமரன், பு. ஞானரூபன், அ. மோகன் ஆகிய நால்வரும் கடலில் குதித்து கரையை வந்துசேர்ந்தனர். சற்கோட்டையில் இறந்தவர்கள் சென்ற படகுகளில ஒன்று வல்வெட்டித் துறையிலும், மற்றைய இரண்டும் சற்கோட்டைப் பகுதியிலும் மீட்கப்பட்டன. (யோ)

### உலங்குவானூர்தி

வர்கள் கலிபர் தாக்குதலினாலும், நாவற்குழியைச் சேர்ந்த எஸ். தங்கராசா (வயது 47) என்பவர் கிரனைட் தாக்குதலினாலும் காயமடைந்தவர்களாவர்.

(சி) (பா)

### ஹெலி

க்கான ஆரம்ப காரணம் எனவும் இதனை விட மிகவும் உறுதியான உலங்கு வானூர்தியான ரஷ்சிய ''எவீயா'' உலங்குவானூர்திகளை குறைந்த விலைககு கொள்வனவு செய்ய முடியும் என கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 நாடுகளின் 13 கேள்வி கட்டளைகள் பெறப்பட்ட போதும் அதில் சரிபாதி கேள்விக் கட்டளைகளே பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது எனவும் தெரியவருகிறது.

துங்கவிடம் அவரின்பணிப்பின் பேரில் வழங்கியிருந்தனர். தமது சிபார்சுகளுக்கும், ஆலோசனைகளுக்கும் ஆதரவு தேடும் வகையில் இந்த முன்னாள் ஐந்து தளபதிகளும் அரசாங்கதலையும், எதிர்க் கட்சித் தலைவர்களையும் கலந்து பேசியுள்ளனர்.

இவர்களின் ஆலோசனைகளில் ஒன்றாக போர் கவுன்சில் பொது எதிரியான- புலிகளுக்கு எதிராக அனைத்து கட்சியினரையும்ஒன்று படுத்தி வைக்கும்என பட்டிமென்டிஸ் தெரிவித்தார். இவர்களின் சில சிபார்சுகளை ஏற்கனவே அமுல் படுத்தியிருப்பதாக ஜனாதிபதி அறியத்தந்திருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். எனினும் இந்த போர் கவுன்சில் தொடர்பாக சில பிரச்சினைகள் ஏற்படலாம் என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். போர் கவுன்சிலால் முன்வைக்கப்படும் திட்டங்களை சிறிமாவோ பண்டாரநாயக்கா போன்ற எதிரணித் தலைவர்கள் எதிர்ப்பின் அதை அரசு கைவிடவேண்டிய நிலை ஏற்படும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஓய்வு பெற்ற இத் தளபதிகளின் சிபார்சுகள் குறித்து இதுவரை எந்த உறுதியான முடிவுகளும் எடுக்கப்படவிலலை என தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜெனரல் சேபால ஆட்டிகல குறிப்பிட்டார்.

இராணுவத்தின் தரைப் படையின் போரிடும்ஆற்றலை அபிவிருத்திசெய்யவும் கவசப் படையை பலமாக்கவும் விசேட படைப்பிரிவுகள் செயற்பாட்டை அதிகரிக்கவும் மருத்துவ சேவையை மேலும் முன்னேற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக உயர் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன என அக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கப்டன்

## வெள்ளைத்தேவன் (நியூட்டன்)

செல்வநாயகம் சசிகரன்
(புன்னாலைக் கட்டுவன் வடக்கு)

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 03 - 04 - 1975 | 22 - 11 - 1993 |

அரியணைத் தமிழை ஏந்திடவே
ஆண்ட தமிழினம் முடிபெறவே
இளையோன் நியூட்டன் - ஆருயிரை
ஈந்தான் இந்தத் தமிழ் மண்ணில்
உத்தமன் வெள்ளைத் தேவன் - நீ
மாவீரர் குருதிச் சுவட்டின் வழி
எம்மின மக்களின் விடிவிற்காய்
ஏந்தினாய் கரங்களில் ஆயுதத்தை
ஐயமின்றி நாம் கூறுகின்றோம்
உன் ஆத்ம சாந்திக்காய்
அயராது உழைத்திடுவோம்.

22. 11. 1993 அன்று அளவெட்டிப்பகுதியில் நடந்த நேரடி மோதலில் இவருடன் வீரச்சாவு எய்திய லெப். கதிரவன் (கிரிமாமா) அவர்களிற்கும் இந் நாளில் நினைவஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

தற்போதைய முகவரி:
உரும்பராய் கிழக்கு,
ஞானவைரவர் வீதி,
உரும்பராய்

- குடும்பத்தினர்

(இ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.